

# பரலோக பொக்கிஷங்கள்

உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!

## ‘ஆபகூக்’ வழங்கிய வாழ்வின் செழிப்பான சங்கீதம்!

வசந்தம் இல்லை! பலனும் இல்லை! தானிய விளைவும் இல்லை! என “இல்லை.... இல்லை” என்ற வாழ்வின் கடினமே எனது உயரமான ஸ்தலம் - MY HIGH HILLS என ஆபகூக் கண்டார்! அவைகளைக் கடந்து சென்றிட கர்த்தரால் கட்டளையிடப்பட்ட ஆபகூக், ‘தன்னால் அது முடியாது’ என அறிந்து, தன் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூர்ந்தார்! ஆ, இது ஆச்சரியம்.... என் கால்களை உயர் குன்றுகளில் பாய்ந்து நடக்கும் “மான் கால்களைப்” போலாக்கினார்! என்னை நடக்கப் பண்ணினார்! என மகிழ்ந்து கூறினார் (ஆபகூக்.3:17-19). ‘இது ஆபகூக் ஒப்புவித்த சங்கீதம்’ என 19-ம் வசனம் கூறுகிறது! அன்று, ‘பாமாலை பாடி’ பெலனடைந்து, கொல்கொதா குன்றில் ஏறி வெற்றி சிறந்த இயேசுவின் அடிச்சுவடு, இன்று நம்மையும் அவரது அடிச்சுவடு பின்பற்ற அழைக்கிறது!

*-tr*

பெட்டகம் 20 | அக்டோபர் 2018 | பரல்கள் 10



## நம்மை 'அவரது சாயலாக்கும்' குயவனின் கரம்!

தெரிந்துகொள்ளப்பட்டு, முற்றிலும் அர்ப்பணித்த களிமண்ணை, உடைத்து, வளைத்து, வனைந்திடும் குயவனின் கிரியை அனைத்தும் "சகலமும் நன்மைக்கே" நடந்தேறியது.... என்றே அந்த களிமண் முடிவில் அறிக்கை செய்திடும்! குயவனும், தான் வனைந்திட்ட பாத்திரத்தை "என் ஜனம்" என்றும் "என் ஒரே புத்திரனான இயேசுகிறிஸ்துவின் சாயல்!" என்றும் களிகூருவார்! (ரோமர். 9 : 21,25).

குயவன் எவ்விதம் என்னை வளைப்பார், உடைப்பார் என்றதற்கு.... கேள்வி அல்லது நிபந்தனை ஏதும் இல்லை! (ரோமர்.9:20). அந்த களிமண் நெருக்கப்படும்! ஒடுக்கப்படும்! அடிக்கப்படும்! நியாயம் அதற்கு நடப்பதில்லை! பிறருடைய மீறுதலுக்குத் தானே வாதிக்கப்படும்! முடிவில்... குயவனுக்கு சித்தமானது அவர் கையினால் வனையப்பட்டு "கனத்திற்குரிய பாத்திரம்" அவரது கையில் மிளிர்ந்திடும்!! (ஏசா 53 : 10).

இந்த மகிமையான சுவிசேஷத்தின் வழியை விட்டுவிலகுவது நியாயமல்ல! குயவனின் பலத்த கரத்தில் அடங்கியிருப்பதே நியாயம்! பாக்கியம்! (1பேதுரு.5 : 6). 'அவரதுசாயல்' பெற்றிடும் சிறப்பே, மணவாட்டியாய் ஆயத்தமாகும், அவரது சபையின் பாக்கியம்.... வேறு எதுவுமல்ல!!

*-Ed*


**2018 'பரலோக பொக்கிஷங்கள்'**

வருட சந்தா ரூ.**140.00**   **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**120.00**

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch

**A/c no: 502087685** Ifsc code: IDIB000K150

(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்

207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India

Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306

Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com

## 'சிமியோன் தீர்க்கதரிசனம்' இன்றும் நிறைவேறி வருகிறது!

*இயேசுவைக் குறித்து சிமியோன் தீர்க்கதரிசனம் உரைத்தபோது "அவர் (இயேசு) நியமணம் செய்யும் ஒரு தரத்தை, அநேகர் தாக்குவார்கள்!* **அதன் மூலமாய்,** *அவர்களுடைய இருதயங்களின் அந்தரங்க யோசனைகளை அவர் வெளிப்படுத்துவார்" என்று கூறினார் (லூக்கா.2:34,35-*J.B.Phillips*-விரிவாக்கம்)*

*ஜெப ஆலயத்திலிருந்த மார்க்கத்தலைவர்கள் எல்லோருமே, ஜனங்களின் பார்வைக்கு 'பரிசுத்தர்களாகவே' தோற்றமளித் தார்கள்! ஆனால்* **அவர்கள் நடுவில் இயேசு வந்தவுடன்,** *அவர்களின் வெளித்தோற்றத்தின் வஞ்சகங்கள் உரிக்கப்பட்டு, அவர்களின் மாய்மாலங்களும் வஞ்சனைகளும் வெளியரங்கமாயின!*

*விபச்சாரத்தில் பிடிபட்ட ஒரு ஸ்திரீயை பரிசேய குழுவினர் 'அந்த ஸ்திரீயை கல்லெறிந்துக்கொள்ள' விரும்பிய சமயம்,* **இயேசு அவர்கள் நடுவில் வந்தார்!** *அச்சமயத்தில் 'அவர்களுடைய உள்ளான இருதயத்தின் நோக்கங்கள்' உடனடியாக வெளியரங்கமானது (யோவான்.8:3-11). அந்த நிகழ்ச்சியில் 'இயேசுவின் மீது ஏதாகிலும் குற்றம் சாட்டுவதற்கே' பரிசேயக் குழுவினர் விரும்பினார்கள் (யோவான்.8:6). ஆனால் இயேசுவோ "உங்களில் பாவம் இல்லாதவன் முதலாவதாக கல்லெறியக்கடவன்" எனக்கூறினார். உடனடியாக 'அவர்கள் இருதயத்தின் உள்ளான நிலைமை' வெளியானது! அவர்கள் அனைவருமே, கல்லை கீழே போட்டு போய்விட்டாலும்,* **"பெரியோர்களே முதலாவதாக!"** *வெளியேறினார்கள். 'மூத்த பரிசேயர்களே' மிகப்பெரிய மாய்மாலத்தில் எப்போதும் இருந்தார்கள்! ஒரு ஸ்திரீயின் பாவத்தை ஏதுவாய் கொண்டு, அவளை குற்றம் சாட்டியவர்களின் துன்மார்க்கம் வெளிப்படும்படி தேவன் செய்தார். இங்கும், அவர்கள் நடுவே இயேசு வந்தவுடன் அவ்வாறு சம்பவித்தது.*

*இன்றும், நம்முடைய இருதயங்களில் "பிறரை ஆக்கினைக் குள்ளாக தீர்க்காதிருங்கள்! உங்களில் பாவம் இல்லாதவன் முதலாவதாக கல்லெறியக்கடவன்" எனக்கூறும் இயேசுவின்*

*வார்த்தைகளை நாம் கவனித்து கேட்காவிட்டால், நாமும்கூட இந்த பரிசேய கூட்டத்தில் ஒருவராய் மாறி, இயேசுவின் சமூகத்தை விட்டு நித்தியமாய் விலகி விடுவோம். ஆகவே, "எல்லா நியாயத் தீர்ப்புகளையும்" நாம் தேவனிடம் விட்டு விடுவதே நலம்! ஏனெனில், அவர் ஒருவரே நீதியுள்ள நியாயாதிபதி!*

*பிலாத்து, ஒருவருக்கும் பயப்படாத! யாருடைய அபிப்பிராயங் களையும் பொருட்படுத்தாத! ஒரு வல்லமையான அதிபதிபோல்! காணப்பட்டான். ஆனால்,* **இயேசு அவனுக்கு முன்பாக நின்று பேசிய போது,** *'பிலாத்தின் உண்மையான நிலை' உடனடியாக வெளியரங்க மாக்கப்பட்டது. "இயேசு குற்றமற்றவர்" என பிலாத்து அறிந்திருந்த போதும், அவரைச் சிலுவையில் அறைவதற்கு ஜனங்களிடம் பிலாத்து ஒப்புக்கொடுத்து விட்டான்! இவ்வாறாக,*

**பிலாத்து ஒரு கோழை என்பதும்! ஜனங்களின் அபிப்பிராயங்களுக்குப் பயந்தவன் என்பதும்! வெளியரங்கமானது.**

*இவ்வாறு எல்லா சமயங்களிலும் இயேசுவுக்கு நேர்ந்த ஜனங்களின் எதிர்ப்பு 'அவர்களின் உள்ளான நிலையை' வெளியரங்கப் படுத்தியது! இவ்வாறாகவே, இயேசுவைக் குறித்து சிமியோன் தந்த தீர்க்கதரிசனம் நிறைவேறியது!*

*நாம் இயேசு பிரசங்கித்த ஜீவியத்தின் உயர்ந்த தரத்தை அறிவிக்கும் போது, மாம்சீகமான கிறிஸ்தவர்களே நம்மை குறைகூறுகிறார்கள்! அவ்வாறு குறை சொல்லுபவர்கள், 'தங்கள் சொந்த இருதயத்தின் மனுஷீகத்தை' வெளிப்படுத்துகிறார்கள் என்ற உண்மை அவர்களுக்கே தெரிவதில்லை! நாம் அவர்கள் நடுவில் சென்று "புதிய உடன்படிக்கையின் தரத்தை" அறிவிக்காவிட்டால், மற்றவர்களின் அந்தரங்கங்கள் வெளியரங்கமாவதற்கு வாய்ப்பில்லை!*

*– சகரியா பூணன்*

---

## என்னை ஒப்புக்கொடுத்த ஆலயம், தீட்டுப்படவில்லை!

*என் கணவர் வெகுசீக்கிரத்தில் மரணதறுவாய்க்கு வந்து விட்டார். அவருடைய சரீர பெலவீனமும், நோயும் இடைவெளி இல்லாமல் ஏற்பட்டது. ஒரு வியாதியிலிருந்து சுகமடைந்ததும் மற்றொரு வியாதிக்குள் சென்று விடுவார். இச்சமயங்களில், சரீர வலியை சகித்துக்கொண்டு, சுகம் பெறும் நோக்கம் ஒன்றையே மனதில் வைத்து அதிக நேரம் ஜெபித்தார். அப்படியிருந்தும் "என்மீது அவர் கொண்ட கோபம்" குறைந்திடவில்லை. சுகம் பெறுவதற்கு பக்தியை*

*கையாண்டு விட்டு, ஜீவிய நற்குணத்திற்கு பக்தியில்லாதிருப்பது எப்படி? என நான் வியப்படைந்தேன்!*

**அதுமாத்திரமல்ல, தன்னைக் குறித்து மற்றவர்கள் 'தவறாய் புரிந்து கொண்டு பேசுகிறார்கள்' என கேள்விப்பட்டதும், ஆத்திரமும் மனசோர்வும் அடைந்துவிட்டார்! ஆனால், என்னைக் குறித்து சிலர் அவரிடம் தவறாய் குற்றம் சாட்டியதைக் கேட்டவுடன், என்மீது கடுங்கோபம் கொண்டார். இப்படி ஒரு, மாறுபாடான பக்தி வாழ்க்கையை கிறிஸ்தவ ஜனங்களும் கொண்டிருப்பது, அவர்களிடம் தெளிந்த புத்தி இல்லை என்பதையே காட்டுகிறது.**

*ஆவியானவரோ, நமக்கு தெளிந்த புத்தியை பரிசுத்தாவியானவர் மூலமாய் வழங்கியிருக்கிறார் (2தீமோ.1:7). மற்ற நாட்களைவிட, அவரது வியாதியின் படுக்கையில் 'என்மீது கொண்ட கோபம்' கூடியதே அல்லாமல் குறைந்திடவில்லை!*

*முன்பெல்லாம் என்னை அதிக துன்பப்படுத்திய பணிப்பெண், இப்போது என்மீது சற்று பரிவு காட்டத் தொடங்கினாள். அன்று, என் தனி அறைக்குள் பிரவேசித்த அந்த பணிப்பெண், என்னிடம் வந்து "பெருமாட்டியே, எஜமான் அறைக்குள் சீக்கிரம் வாருங்கள். உங்கள் மாமியார் உங்களைக் குறித்து பொல்லாதவைகளை பேசுவதைக் கேட்க என்னால் தாங்க முடியவில்லை. நீங்கள் அங்கு வந்துவிட்டால், உங்களைக் குறித்த இழிவான பேச்சு நின்றுவிடும்" என கூப்பிட்டாள். என் பணிப்பெண்ணிடம், யாதொரு சலனத்தையும் என் முகத்தில் காட்டவில்லை. அதாவது,* **என் மாமியாரின் பகை ஒன்றையும் நான் அறியாததுபோல்** *என் கணவர் அறைக்குச் சென்றேன். பணிப்பெண் கூறியபடியே, என் மாமியார் அமைதியாகி விட்டார்! ஆனால் சிறிது நேரம் அமைதியை கட்டுப்படுத்திக்கொண்ட என் மாமியார், பகிரங்கமாகவே தன் கோபங்களைக் கொட்டித் தீர்த்தார்கள். பல நாட்களாய் படுக்கையிலிருக்கும் என் கணவரைப் பார்க்க வந்த பெரும்பாலான உறவினர்கள் "என் கணவர் என்மீது கொண்ட தொடர்ச்சியான கோபத்தையும், நான் அதை பொறுமையுடன் சகித்து அவருக்குப் பணிவிடை செய்ததையும்" கண்டுகொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது!*

*நோயுற்ற என் கணவரை பல வாரங்களாய் கண்விழித்து பார்த்த எனக்கு,* **தனிமையில் தேவனோடு கொண்ட என் தியான வாழ்க்கை இனிய நினைவுகளாய்** *என் உள்ளத்திற்குள் நினைவுக்கு வந்தது. வீட்டிற்குள் நான் தேவனோடு ஜெபித்துக்கொண்டிருந்தபோதும், நானோ தனி இடத்தில் என் நேசரை தரிசிப்பதில் இன்பம் கண்டவள்!*

*என் சிந்தையில் கடந்த நாட்களை யோசித்து, என் கணவர் தன்னுடைய மாளிகை அருகில் கட்டிவைத்த 'சிற்றாலயத்தை'*

எண்ணிப் பார்த்தேன். அந்த சிற்றாலயத்தை ‘தேவனுக்குப் படைக்கும்’ நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்ற நான், திடீரென்று தேவ பிரசன்னத்தில் ஆட்கொள்ளப்பட்டு “முற்றிலும் என்னை புதிதாய் அர்ப்பணிக்க” அவ்வேளையில் உந்தப்பட்டு என்னை ஒப்புக்கொடுத்தேன். “எனக்குள் ஒரு ஆலயம்” அவருக்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்ட உணர்வு “அந்த சிற்றாலயம் அர்ப்பணிக்கப் பட்ட உணர்வை விட மேலோங்கி” இருந்தது.

**நான் கர்த்தரை நோக்கி, ஓர் அமைதியான குரலில் “ஓ கர்த்தாவே, இந்த என் ஆலயம் எக்காலத்தும் தீட்டுப்படாதிருப்பதாக! என் இதய ஆலயத்தில் உம் துதியின் புகழ் என்றென்றும் கீதமாய் தங்கியிருப்பதாக” என ஜெபித்தேன்.**

அந்த என் ஜெபத்திற்கு, கர்த்தர் உடனடியாக பதில் தந்ததையும் உள்ளத்தில் உணர்ந்து மகிழ்ந்தேன். என் கணவரின் நோய் படுக்கையின் வாரங்கள் பல உருண்டு சென்றாலும், ‘எனக்குள் உள்ள ஆலயம் தீட்டுப்படாமல்’ தேவனுடைய உறவில் மகிழ்வுடன் இருப்பதையே நான் பெற்ற ஆறுதலாய் கண்டேன்!

– மேடம் குயான்

---

## “அவர் சமூகத்து மௌனத்தில்” ஆனந்திப்பதே மெய் ஆராதனை!

இன்று அநேக கிறிஸ்தவர்கள், தாங்கள் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதை **‘இன்னிசை பாடல் மூலமாய்’** ஒருவனின் ஆத்துமாவிலிருந்து வெளிப்படுவதையே மிகப் பிரதானமாய் காண்கிறார்கள். ‘அதுவும் உண்மைதான்’ என்ற நிலை இருக்கிற படியால், அதை மறுப்பதென்பது ‘ஆவிக்குரிய கடினத்தன்மை’ என்றே கூற வேண்டும். ஆகிலும், இதுபோன்ற பாடல்களும், துதியின் பரவசங்களும் வேத வாக்கியங்களின் பரீட்சைக்கு முன் நிறுத்தப்பட வேண்டும். பாடுவோரின் அல்லது துதிப்போரின் கிறிஸ்தவ சாட்சியும், இந்த பரீட்சைக்கு முன்பாக நிறுத்தப்பட வேண்டும். இந்த பரீட்சையே, இன்றுள்ள கிறிஸ்தவத்திற்கு அவசியமாயிருக்கிறது.

**வேதாகம தேவ மனிதர்களும், ஆயிரமாயிரமான பரிசுத்தவான்களும் நமக்கு பகிரங்கமாய் வெளிப்படுத்திக் காண்பிப்பது என்னவென்றால்.... இந்த இசைப்பாடலுக்கும், துதிகளுக்கும் அப்பாற்பட்டதாக ‘பக்தி வாழ்வின் அனுபவம்’ இருப்பதை தெள்ளத்தெளிவாக காட்டுகிறது.**

சொல்லி முடியாத பெருமகிழ்ச்சியை நம் இருதயம் அனுபவிக்க வேண்டியதெல்லாம் “தேவனுடைய மகத்துவமான அவரது சமூகமே” ஆகும். அந்த பேரானந்தத்தை எந்த வார்த்தையினாலும்,

*பாடலினாலும் விவரிக்க இயலாது.* **சகரியா தீர்க்கதரிசி** *இதைக் குறிப்பிட்டு "மாம்சமான சகலமான பேர்களே, கர்த்தருக்கு முன்பாக மௌனமாயிருங்கள்; அவர் தமது வாசஸ்தலத்திலிருந்து எழுந்தருளினார் என்று சொல்" என்றார் (சகரியா.2:13). 'மௌனத்தில்' கர்த்தர் சமூகம் பிரவேசிக்கும் இனிமை! ஒன்று இருப்பதாகவே இன்றுள்ள பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அறிந்ததில்லை.*

**'ஓர் வலிமை நிறைந்த ஆராதனையின்'** *தாற்பரியம் இன்றைய கிறிஸ்தவ சந்ததிகளில் கொஞ்சம் கொஞ்சமாய் இழக்கப்பட்டு போகிறது. நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தின் தரம் இன்று வெகு தாழ்வாய் சென்று கொண்டிருக்கிறபடியால், ஆத்துமாவின் சம்பூரண ஆழம் விசுவாசிகள் இன்னதென்று அறியாதிருக்கிறார்கள். ஆகவே, எப்படியாகிலும் ஆத்தும மகிழ்ச்சியான பாடல் என்றும், துதி என்றும் நுழைந்து, தங்களை போலியான திருப்திக்குள் கொண்டு வருகிறார்கள். ஆனால் அது ஆத்துமாவின் மேலோட்டமான நுரையே அல்லாமல் 'தெய்வீக பேரானந்த, ஆத்துமாவின் ஆழம் அல்ல!'. இந்த உண்மையை ஜனங்கள் நித்தியத்தில் காணும்போது, அவர்களுக்கு அது வெட்கத்திற்குரியதாயிருக்கும்!*

*'பாடி மகிழ்வதை' நான் குறைத்துப் பேசுவதாக எண்ணி விடாதீர்கள். அது எனக்கும் இன்பமே! பூமியின் சகல சிருஷ்டிப்பும், வானத்தின் விண்-மணி படைப்புகளும் 'தெய்வ துதியின்' சங்கீர்த்தனத்தினால் நிறைந்திருக்கிறது. மரித்தோரிலிருந்து கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்! என்ற ஆர்ப்பரிப்பை கிறிஸ்து தன் சபையிலுள்ள சகோதரர்களின் துதியோடு இணைந்து துதிக்கும்படி, உலகமெங்கும் கூடும் சபைகளில் அவர் சென்று பிரஸ்தாபப்படுத்துகிறார்! ஆகிலும்.... ஆகிலும், இன்னமும் பாடலுக்கும், துதிக்கும் பின்பாக கொட்டிக் கிடக்கும் ஏராளமான சரத்துக்கள் இருக்கிறது! அதைத்தான் நான் உங்களுக்கு வலியுறுத்துகிறேன்.*

*ஒரு மீட்கப்பட்ட இருதயத்தில், பரிசுத்தாவியானவர் 'முழு அளவில் தங்குவதற்கு' ஒருவன் அனுமதித்திருக்க வேண்டும். அதுவே ஒரு இனிய கீதத்திற்கு ஆரம்பமாகும். அந்த ஆவியானவரின் கிரியைகளுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள் நிஜமாகவே பாக்கியவான்கள்! பரிசுத்தாவி மூலமாய் அவர்கள் சுதந்தரித்த தேவனுடைய மகிமை பெருக பெருக "கனம் நிறைந்த மகிமையாய் மாறி"* (Weight of Glory), *ஆத்துமாவை நிறைத்து வழிந்தோடும் பாடலாகவும் துதியாகவும் பொங்கி வழிகிறது!*

**ஆ.... இந்த பரவச துதியில்தான் சகரியா குறிப்பிட்ட "கர்த்தருடைய சமூகத்தில் பரிமளிக்கும் மௌனம்" தோன்றுகிறது. இதையே நான் பாடலுக்கு அப்பாற்பட்ட அனுபவமாய் பெற்றிருக்கிறேன்.**

*கிறிஸ்தவ சீரிய தரத்தில், பரிசுத்தாவியானவர் நடத்தும் இந்த மௌன அனுபவத்தில் "நானும் தேவனும்" சந்திக்கிறோம். ஆ, இந்த ஆச்சரிய, மகத்துவமான ஆராதனையை, இன்றுள்ள கிறிஸ்தவம் இழந்திருப்பது பெரு நஷ்டம்! துதித்து ஆர்ப்பரியுங்கள், முடிவில் அவரின் மகத்துவ மௌனத்தில் கர்த்தரை தரிசித்து ஆராதனை செய்யுங்கள்! ஆமென்.*

*– A.W.டோசர்*

---

## 'பாடுகளின் வழியில்' திரள் ஜனங்களை ஈர்த்துக் கொண்டார்!

**ஆ***விக்குரிய ரீதியாக தியானித்திடும் வசனத்தை, அனேகர் எழுத்தின்படியும் வாழ்ந்திட அஞ்சுகின்றனர்! ஆனால், சாது சுந்தர்சிங் கீழ்காணும் வசனத்தை எழுத்தின்படியும் ஏற்று, கீழ்ப்படிந்து, அனுபவித்தார்!*

**1. அவர் குமாரனாயிருந்தும் தாம் பட்டபாடுகளினால் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் (எபிரெயர்.5:8).**

**2. கிறிஸ்துவையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் நான் அறிந்துகொள்வதற்கு எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன் (பிலி.3:8-10).**

*தமது பரம எஜமானனுக்குத் தொண்டு செய்துவரும் இந்த வருடங்களில் சுந்தர்சிங் பட்ட சொல்லி முடியா கஷ்டங்கள் அவர் ஒருவருக்குத்தான் தெரியும். பலமுறை உண்ணத்தகுந்த உணவு கிட்டாததால், காட்டில் விளையும் கனி கிழங்குகளையே புசித்து 'என் பசியின் அகோரத்தைத் தணித்துக்கொண்டேன்' என்றும், கல் நெஞ்சரான ஊரார் இராத்தங்க இடங்கொடாமல் என்னை விரட்டினதால், அடிக்கடி மரத்தடியிலேயோ இருண்ட கெபி யிலேயோ படுத்து நித்திரை செய்தேன் என்றும் சுந்தர் சொன்னார்! இக்கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்த ஒவ்வொரு நாடுகளிலும் விசேஷ அபாயங்கள் நிறைந்திருந்தன! ஆகையால் சுந்தர்சிங் இரவில் இளைப்பாறச் சென்ற கேவலமான இடங்களில், ஒரு காட்டு மிருகமோ.... பாம்போ தம்மோடு தங்கியிருந்ததைக் கண்டு திடுக்கிட்ட சம்பவங்கள் அநேகம்!*

**தோரியோ** *என்ற தாலுக்காவின் ஒரு கிராமத்தில் சுந்தர் தங்கியிருந்த காலமெல்லாம் பக்கத்திலிருந்த காடுதான் அவர் உறங்குமிடமாயிற்று.*

அக்கிராமத்தார் அவரை அவ்வளவு கொடுமைப்படுத்தினார்கள். ஓர் இரவு மனம்சோர்ந்து, தேகம் களைப்புற்றவராய் சுந்தர்சிங் இருண்ட கெபிக்குள் நுழைந்து, தன்னுடைய போர்வையை விரித்தபோது **தன் பக்கத்தில் இன்னும் அயர்ந்து தூங்கின பெரிய சிங்கம் ஒன்றைக்** கண்டார். திகில் கொண்டெழுந்து, அம்மிருகத்தின் வாயினின்று தப்புவித்த எம்பெருமான் திருவடிகளைப்போற்றிக்கொண்டு சென்றார். ஆயினும், துஷ்டமிருகமொன்றும் அவருக்குத் தீங்கு செய்ததில்லை.

மற்றொரு தரம் ஊராரால் துரத்துண்டு, தனியே தியானம் பண்ணும்படி ஒரு பாறையின் மேல் உட்கார்ந்தார்.

**பாறையினருகில் பரம நிஷ்டையில் ஆழ்ந்திருந்த ஒரு கருஞ் சிறுத்தையை சுந்தர்சிங் கவனிக்கவில்லை. தூங்கி முடித்த பிறகு, தாமிருந்த அபாய நிலைமையை அறிந்து பயங்கொண்ட போதிலும், இதுவரை தம்மைக் காத்துவந்த தெய்வத்தின் துணையை சார்ந்து அமைதலாய் எழுந்து கிராமத்திற்குச் சென்றார்!**

தெய்வம் சுந்தருக்குத் தந்த, இந்த அதிசயக் காவலைக் கேட்ட ஊரார், தம்மில் பலரைக் கொன்று தின்ற இந்த துஷ்டமிருகத்திற்கு இரையாகாது தப்பின இவர் ஒரு புண்ணிய புருஷர்போலும்! இவர் சொல்லும் நன் மொழியை நாம் கேட்பதும் தகுதியே என்று நினைத்து, சுந்தரை நயந்து அவருக்கு பயபக்தியாய் செவி கொடுத்தார்கள்! இதைக் கண்ட சுந்தர் தேவனைத் துதித்து மனதிடமுடன் அவர்களுக்கு ஊழியம் செய்தார்!

கங்கை நதியோரத்தில், ரிஷிகேஷ் என்ற இடத்தில் நீராட வந்த ஜனத்திரளில் சில இந்து சாதுக்களும் இருந்தார்கள். அவர்கள் மத்தியில் புதிய ஏற்பாட்டைக் கையில் பிடித்தவராய் சுந்தர் எழுந்து நின்று பிரசங்கித்தபோது **திடீரென்று ஒரு துஷ்டன் கை நிறைய மணலை வாரி சுந்தரின் கண்களில் எறிந்தான்.** இந்த அநியாயத்தை அங்கிருந்த ஒரு நல்ல மனிதன் பொறுக்கக்கூடாதவனாய், அத் துஷ்டனைப் போலீசாரிடம் பிடித்துக்கொடுத்தான். சாதுவோ வாய் திறவாமல் நதிக்குச் சென்று கண்களைக் கழுவிக்கொண்டிருந்தார். திரும்பி வந்து தமக்குத் தீங்கு செய்தவனை விட்டுவிடும்படி போலீசாரைக் கெஞ்சி, மீட்ட பிறகே தன் பிரசங்கத்தை ஆரம்பித்தார். சாதுவின் பொறுமையையும் தயாளத்தையும் பார்த்த அந்த மனுஷன், தன் குற்றத்தை உணர்ந்து, கிறிஸ்துவை தன் இரட்சகராக ஏற்றுக்கொண்டான்.

நீண்ட பிரயாணஞ்செய்து தொய்ந்து, பசியாலும் தாகத்தாலும் மிக வருந்தி, ஒரு சாயந்திரம், சுந்தர் **தொலிவாலா** என்ற ஊர் வந்து சேர்ந்தார். தெருதெருவாய் அலைந்து, தங்குவதற்கு சிறிது விடுதிக்காகக்

கெஞ்சியும், இவர் கிறிஸ்தவரானதால், ஒருவரும் இவருக்கு உதவி புரிய விரும்பவில்லை. கண்டவரெவரும் இவரைக் கோபித்துத் துரத்திவிட்டார்கள். கனமழை பெய்தது, குளிரும் அதிகக் கொடூரமாய் இருந்தது. சுந்தரோ தம் உடலிளைப்பைத் தாங்கக்கூடாதவராய் கதவு, சன்னல்கள் இல்லாத ஒரு குடிசையையடைந்து, தரை சற்று உலர்ந்திருந்த மூலையில் படுத்துக்கொண்டார். பசியின் கொடுமைக்குத் தப்பாவிட்டாலும் மழைக்காவது தப்பினேனே! என்ற எண்ணத்தோடு கடவுளுக்கு நன்றி சொல்லிவிட்டுத் தூங்கினார்.

**கிழக்கு வெளுக்குமுன் நித்திரைவிட்டெழுந்து பக்கத்தில் சுருண்டு கிடந்த வஸ்து என்னவென்று உற்றுப்பார்க்கவே, அது பெரிய நாகப்பாம்பென்று கண்டார்! இராமுழுவதும், சுந்தர்சிங்கை தீண்டாமலே அந்த நாகம் படுத்திருந்தது!**

அதைக் கண்டவுடன் துடித்தெழுந்து நின்றார்! ஆனால் கொஞ்சம் நிதானித்து பார்த்தபின், திரும்பிவந்து தன் கம்பளியின் ஓரத்தை பிடித்து உதறினார். பாம்பு கீழே விழுந்து ஒரு புறமாய் ஒதுங்கிப் போய்விட்டது. இவர் நித்திரை செய்தபோது இந்தப் பெரிய ஆபத்திலிருந்து தம்மைக் காத்து, இன்றும் சில காலம் தொண்டு செய்யக் கிருபையளித்த ஆண்டவருக்கு நன்றி செலுத்திச் சென்றார். இவ்வாறு, சாது சுந்தர்சிங் பேசியதைவிட, **அவரது ஊழியத்தில் வெளிப்பட்ட தியாகமும், தெய்வ அன்பும்** பல்லாயிரம் மக்களை கிறிஸ்துவுக்குள் ஈர்த்துக்கொண்டது!

– சாது சுந்தர்சிங்

---

## வேத சாஸ்திரமல்ல ‘அபிஷேகமே’ என்னைத் தகுதிப்படுத்தியது!

**தி**ருவாங்கூர் ராஜ்யத்திலுள்ள மாராமன் என்ற இடத்தில் வருஷா வருஷம் பிப்ரவரி மாதம் சீரியன் கிறிஸ்தவர்களுக்காக ஒரு பெரிய கன்வென்ஷன் நடக்கும். ஆற்றுமணலில் பந்தலின்கீழ் 35,000 பேருக்குமேல் திரளாய் கூடுவார்கள். **கனம் உவாக்கர் ஐயர்** அந்த கன்வென்ஷனுக்குப் போனபோது என்னையும் அழைத்துப் போனார்கள். ஆண்டவரை மகிமைப்படுத்த அது எனக்குக் கிடைத்த பெரிய சிலாக்கியமாயிருந்தது. ஐந்து வருஷங்கள் அந்தக் கன்வென்ஷனுக்குப்போய் பிரசங்கித்திருக்கிறேன். இக்காலத்தில் உள்ள ஒலிபரப்பி அக்காலத்தில் இல்லை! பிரசங்கம் எல்லாருக்கும் கேட்கும்படியாக ஜனங்கள் மத்தியில் வரிசையாக மூன்றுபேர் நிற்பார்கள். நான் சொல்வதை எனக்கு அப்பாலே நிற்பவர் சத்தமாய் சொல்லுவார். அதை அடுத்தவர் எடுத்துச் சொல்லுவார். மறுபடியும்

அதை மூன்றாவது நிற்பவர் சொல்லுவார். அதன் பின் நான் பேசுவேன். இப்போது அந்த கஷ்டம் நீங்கிவிட்டது. நான் கடைசியாக ஐந்தாம் கன்வென்ஷனுக்குப்போயிருந்தபோது **சாது சுந்தர்சிங்கும் அங்கே பேசும்படி வந்திருந்தார்.** நாங்கள் இருவரும் மாறி மாறிப் பேசினோம். கன்வென்ஷன் முடிந்து நான் இராயபுரம் திரும்பினேன். சாதுசுந்தர்சிங் பஞ்சாப் திரும்பினார். அப்புறம் தெய்வ பிரகாசம் கொண்ட சுந்தர்சிங் காணப்படாமல் போனார்.

கனம் உவாக்கர் ஐயரோடும் டாக்டர் எடியோடும் நான் சேர்ந்து வேலை செய்த காலத்தில் கர்த்தர் என் வேலையை அதிகமாய் ஆசீர்வதித்தார்.

**நான் ஒருவரோடு தனித்துப் பேசினாலும், ஒரு சிறு கூட்டத்தில் பேசினாலும், ஆயிரக்கணக்கானவர்கள் கூடும் கன்வென்ஷனில் பிரசங்கித்தாலும் தேவாவியானவரின் வல்லமை பிரத்தியட்சமாய் காணப்படும். என் பேச்சும் என் பிரசங்கமும் அபிஷேக வல்லமையாய் இருக்க வேண்டும் என்பதே என் வாஞ்சையும் ஜெபமுமாயிருந்தது.**

கனம் உவாக்கர் ஐயரோடு நான் சேர்ந்து பிரசங்கித்து வந்த காலத்திலும், டாக்டர் எடி, கனம் அசரியா அவர்களோடு நான் சேர்ந்து பிரசங்கித்து வந்த காலத்திலும், கூட்டங்களை நடத்தும்போது முறையே மாறி மாறிப் பேசுவோம்.

**1906** -ல் நான் தனித்த பிரசங்கியானேன். அக்காலத்தில் பல இடங்களுக்கும் போய் ஜனங்கள் கிறிஸ்துவுக்குள் கட்டப்பட கூட்டங்களை நடத்தினேன். அது, அநேகருக்கு ஆசீர்வாதமாயிருந்தது. சென்னை மெமோரியல் ஹாலில் நான் விசேஷித்த கூட்டங்களை நடத்தியிருக்கிறேன். கிறிஸ்தவர்கள் திரளாக வந்து வசனத்தைக் கேட்பார்கள். ஒரு சமயம் அங்கே நான் **'தேவனுடைய ராஜ்யம்'** என்ற தலைப்பில் பேசினேன். அப்பொழுது பிஷப் உவாலர் தலைமை வகித்தார்கள். நான் பேசினதைக் கவனித்த பிஷப், தன் பக்கத்திலிருந்த கனம் கிளார்க் ஐயரவர்களிடம்: இவர் நன்றாய் பேசுகிறார். முன்னொரு சமயம் இவர் பேசினதை நான் எழும்பூரில் கேட்டிருக்கிறேன் என்றார்களாம். "அவர் எப்பொழுது பேசினாலும் வல்லமையோடு தான் பேசுவார்" என்று கிளார்க் ஐயர் பதில் சொன்னார்களாம். வேறொரு சமயம் நான் மெமோரியல் ஹாலில் பேசினேன். கூட்டம் முடிந்தபின் சிலர் வெளியில் நின்று: இவர் இவ்வளவு அருமையாய் பேசுவதெப்படி? இவர் வேதசாஸ்திரம் கற்றிருப்பாரோ? பி.ஏ,எம்.ஏ படித்திருப்பாரோ என்று பேசிக் கொண்டார்களாம். அவர்களோடு நின்ற திரு.ஞானோர்ஜிதம் அவர்களைப் பார்த்து:

**வேத சாஸ்திரமாவது, பி.ஏ, எம்.ஏ ஆவது, அது ஒன்று கிடையாது. அவர் மிடில் ஸ்கூல் வரை படித்தவர், அவ்வளவுதான். கடவுளுடைய அருள் பெற்று இப்படிப் பேசுகிறார் என்று சொன்னாராம்!**

*'என் பேச்சும் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசன முள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப் பட்டதாயிருந்தது' (1கொரி.2:5) என்று பவுல் சொன்னது போல, என் பிரசங்கங்களிலும் சம்பாஷணைகளிலும் இருதயங்களை அசைக்கும் ஆவியானவரின் வல்லமையை நானும் உணர்ந்தேன்! பிரசங்கங்களை எழுதி வாசிப்பதோ, குறிப்புகளை வைத்துக்கொண்டு பேசுவதோ கிடையாது. இரண்டு மணிநேரம், மூன்று மணிநேரம் ஆவியில் நிறைந்து பேசியிருக்கிறேன். ஜனங்களோ அசையாது ஆர்வமுடன் கர்த்தரின் செய்தியை கேட்பார்கள்.*

*கைலாசபுரம் ஆலயத்தில் கூட்டங்களை நடத்தினோம். கனம் உவாக்கர் ஐயரும், கனம் ஞானாயுதம் பிரசங்கியாரும், நானும் மாறி மாறிப் பிரசங்கித்தோம். ஒரு இரவு நான்* **மனந்திரும்புதலைப் பற்றி** *ஆவியின் பலத்தோடு பேசினேன். கொர்நெலியுவின் வீட்டில் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் ஆவியானவர் இறங்கினதுபோல 'நடுப்பிரசங்கத்தில்' ஆண்கள் பாவ உணர்வடைந்து ஆசனங்களி லிருந்து முகங்குப்புற மண்டியிட்டு கதறி ஜெபித்தார்கள்! பெண்கள் இருந்த பக்கத்திலுமிருந்து கண்ணீர்விட்டு ஜெபித்தார்கள்! கனம் உவாக்கர் ஐயர் எழுந்து என்னிடம் வந்து: சகோதரனே,* **கர்த்தர் கிரியை செய்ய ஆரம்பித்து விட்டார், உங்கள் பிரசங்கத்தை நிறுத்துங்கள்** *என்று சொல்லி, விழுந்து புலம்பிக் கொண்டிருந்தவர்களிடம் போய் பேசி ஆறுதல்படுத்தினார்கள். அதுபோலவே ஏமி கார்மைக்கேல் அம்மாளும் ஸ்திரீகள் பக்கம்போய் பேசி அவர்களைத் தைரியப் படுத்தினார்கள். இது நடந்து ஏறக்குறை 60 வருஷங்களாகிறது. அந்த காட்சி என் கண்களுக்கு மறையவில்லை! கர்த்தருடைய ஊழியத்திற்கு 'அபிஷேகமே அன்றி' ஊழியத்தின் மேன்மை, யாதொன்றும் இல்லை!*

---

## 'ஆவிக்குரிய புகழ்ச்சி அகற்றி' அவரை ஆராதித்தேன்

***ச****ங்கீதக்காரன் கூறுகிறபடி, தேவனையும் தேவனுடைய வார்த்தையையும் பிரியமாய் கொண்டு வாழ்பவர்களுக்கு ''ஓர் பாக்கியம்'' உண்டு! அது 'அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்' என்பதேயாகும். இந்த பாக்கியத்தை என் ஜீவியத்திலும் ஆசிரம ஊழியத்திலும் ஏராளமாய் அனுபவித்து வந்தேன்!*

*ஆனால் திடீரென்று 'ஒரு சில சமயங்களில்' என் ஊழியங்களில் தடுமாறி, காரியங்கள் சித்திப்பெறாமல் போனதை அனுபவித்தேன். அங்குதான் என்னுடைய பெருமையும் ஆணவமும் வெளிப்பட்டது. அது தேவனே அனுமதித்த தடுக்கல் என்றும் அறிந்து கொண்டேன்.*

**அது ஏன் சித்திப்பெறவில்லை? என்ற எனது எண்ணம் 'என்னை ஒரு பொருட்டாக எண்ணிய' துன்மார்க்கமும், 'காரியம் வாய்க்கவில்லையே' என்ற அங்கலாய்ப்பு, தேவன்மீது கொண்ட முறுமுறுப்பையும் கோபத்தையும், எனக்கு சுட்டிக்காட்டியது!**

*மெய்யாகவே, ஓர் ஆவிக்குரிய துக்கம் என்னை ஆட்கொண்டு தேவனுடைய சமூகத்துக்கு முன்பாக கதறினேன். "ஓ என் தேவனே, எது சித்திப்பெற்றாலும், சித்திப்பெறாமல் போனாலும்.... எது வாய்த்தாலும், வாய்க்காதே போனாலும் என் நெஞ்சில் எழும்பும்* **அக்கிரம மேட்டிமையை** *மாத்திரம் என்னிலிருந்து கழுவிவிடும். ஓ என் தேவனே, எனக்கு ஏன் இவ்வாறு வாய்க்கவில்லை? என்ற* **முறுமுறுப்பையும்** *தயவாய் என்னைவிட்டு அகற்றிவிடும்" என்று மன்றாடி கெஞ்சினேன். உத்தமமான கல்வாரி அன்பின் சிநேகம் எத்தனை ஆழம் கெண்டது என அறிந்து கொண்டேன்!*

*என் ஆவிக்குரிய ஜீவியத்தில் சகலமும் சித்திப்பெற்று சகலமும் வாய்க்கப்படுவதால், எனக்குள் எழும்பி வந்த* **"ஆவிக்குரிய புகழ்ச்சி" என் உள்ளத்தில் விரும்பத் தகாத இன்பத்தை தந்தது** *என்பதைக் கண்டே, என் அன்புள்ள ஆண்டவர் என்னிடத்தில் இடைப்பட்டதை எண்ணி அவரைப் போற்றினேன்! இப்போது மெய்யான கல்வாரி அன்பின் பிரவாகம் என் உள்ளத்தைப் பற்றிக்கொள்ள "தேவரீர் நீரன்றி வேறின்பம் எனக்கு வேண்டாம்!" என தாழப்பணிந்து அவரை ஆராதித்தேன்!*

*– ஏமி கார்மைக்கேல்*

---

## "பிறரை வேவுபார்க்கும்" பொல்லாத இருதயம்!

***மா**ற்கு.3:2 - ம் வசனத்தில் இயேசு ஒரு ஜெப ஆலயத்திற்குச் சென்றபோது, அவர்மீது கோபமாயிருந்த எதிரிகள், அவரிடம் ஏதாவது குற்றஞ்சாட்டலாம் என்று "அவரை நெருக்கமாய் கவனித்துப் பார்த்தார்கள்" இன்றைய - நாகரீக உலக பரிசேயர்களும், இவ்வாறாகவே நீதியாய் வாழும் விசுவாசிகளை, குற்றஞ்சாட்டுவதற்கு ஏதுவாக 'ஏதாகிலும் கண்டுபிடிக்க' மிக கவனமாய் அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்!*

**நீங்கள் எவ்வளவு அதிகம் சிலர் மீது கோபமாயிருக்கிறீர்களோ அல்லது பொறாமையாயிருக்கிறீர்களோ அவ்வளவு அதிகமாய், அவர்களின்**

**வாழ்க்கையை உற்று நோக்கி, அவரிடத்தில் சில பிழைகளை காண்பதற்கு துடித்து நிற்பீர்கள்!**

*பொதுவாய் எல்லா ஜனங்களிடமும் காணப்படுவது போலவே, அவர்களுடைய ஜீவியத்திலும் அல்லது அவர்களுடைய வீட்டிலும் அல்லது அவர்களுடைய குடும்பத்திலும்* **'சில அற்பமான தவறுகள்'** *காணப்படக்கூடும். ஆனால் தேவனோ, தன்னுடைய ஊழியர்களின் மீது கூறப்பட்ட அற்ப தவறுகளை வைத்து, அவர்களை நியாயந் தீர்ப்பவர்களின் 'பொல்லாத இருதயத்தை' வெளிப்படுத்துகிறார்!*

*மேலும் ஆண்டவர் "என்னுடைய ஜனங்களில் பொல்லாத மனுஷர்கள் உண்டு! அவர்கள், வேட்டையாடுபவன் இருளில் பதுங்கி வேட்டை யாடுவதுபோல் 'மனுஷரைப் பிடிக்க' கண்ணிகளை வைக்கிறார்கள்! அவர்களுடைய வீடுகளில் தந்திர கபடங்கள் நிறைந்திருக்கிறது.... இதை காணும் நான், ஒன்றும் நடக்காததைப் போல், விசாரியாதிருப்பேனோ?" எனக்கூறினார் (எரே.5:26,29-*Living*).*

*ஒருசமயம் பரிசேயர்கள் இயேசுவிடம் வந்து "ஏராளமான கேள்விகளை அவருக்கு முன் வைத்து, அவர் வாய்மொழியில் ஏதாகிலும் பிழையை கண்டுபிடித்து அவரை அகப்படுத்தி கைது செய்யலாம்" என உபாயம் செய்தார்கள் (லூக்கா.11:53,54-*Living*). மற்றொரு சமயம், இந்த பரிசேயர்கள் "மார்க்க தலைவர்களை அவரிடம் அனுப்பி, அவரோடு சம்பாஷிக்கும் நேரத்தில் ஏதாகிலும் கண்ணியை வைத்து அவரைப் பிடிக்கலாம்" எனவும் முயற்சித்தார்கள் (மாற்கு.12:13-*Living*). இந்த பரிசேயர்களின் சந்ததிகள், தேவனுடைய ஊழியர்களை கேள்விகள் கேட்டு, அவர்களைக் கண்ணியில் சிக்க வைப்பதற்காக அவர்களைச் சுற்றி விழிப்புடன் கண்காணிக்கிறார்கள். இவ்வாறு பிறரை 'வேவு பார்க்கும்' பொல்லாத இருதயம் கொண்டவர்கள் கிறிஸ்தவத்தில் ஏராளம் பெருகி விட்டார்கள்! ஆகவே "ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்பப்படுகிறதுபோல" செல்லும் நாம் 'சர்ப்பங்களைப்போல் ஞானமுள்ளவர்களாய்' இருந்திட வேண்டும்! (மத்தேயு.10:16).*

*முதல் தரமான பரிசேயராய் நீங்கள் சீக்கிரமாய் மாறுவதற்குரிய ஒரு வழி என்னவென்றால் "மற்ற விசுவாசிகளின் பிழை காண நெருங்கி கவனிப்பதேயாகும்". நீங்கள் அப்படி ஒரு பரிசேயனாய் மாற விரும்பாதவர்களாயிருந்தால், 'இந்த பழக்கத்தை' முற்றிலுமாய் ஒழித்து விடுங்கள்! ஏனென்றால், 'இதுபோன்ற பழக்கம்' ஜனங்களுக்கு உதவும் படி, நல்ல நோக்கமாய் ஒருபோதும் இருப்பதில்லை! மாறாக,*

*அவர்களிடம் குற்றம் கண்டுபிடிக்கும் கெட்ட நோக்கமாகவே எப்போதும் இருக்கிறது!*

**'பரிசேயத்துவ' விஷத்தை முறிக்கும் மாமருந்து 'இரக்கமே' ஆகும்!** *ஆகவே தேவன் நம்மீது இரக்கமாயிருப்பதைப்போலவே, பிறரிடம் இரக்கமாயிருக்க நாம் கற்றுகொள்வோமாக!*

*– சகரியா பூணன்*

---

## 'தேவனோடு உறவே' சிலுவையின் முதல் பிரதானம்

***சி****லுவையின் 'செங்குத்து' (Vertical) மரம் தேவனாகிய நம் பிதாவின் மீதுகொண்ட அன்பையே 'முதலாவதாக' நமக்கு காண்பிக்கிறது. இயேசு மரித்த சிலுவையை அவர்கள் கட்டத் துவங்கியபோது, முதலாவதாக இந்த செங்குத்து மரத்திலிருந்தே ஆரம்பித்திருப்பார்கள். அந்த மரம் 'குறுக்கு' (Horizontal) மரத்தின் அளவைவிட இரண்டு மடங்காயிருந்தது!*

*இதன் முக்கியமான அர்த்தம் என்னவென்றால், பரமண்டலத்தில் வீற்றிருக்கும் தேவனோடு வைத்திருக்கும் உறவே மிக முக்கியமான தாகும்! இந்த உறவே முதலாவதாய் நிலைநிறுத்தப்பட வேண்டும். அதற்கு பிறகுதான் 'பிறரோடு கொண்ட' 'குறுக்கு திசையிலான' உறவு தோன்ற வேண்டும்!*

### இயேசுவின் மாதிரியை பின்பற்றி நடப்போம்

*கல்வாரி மலைமீது இயேசு சிலுவை எடுத்துப்போவதற்கு முன்பாக, தன் ஜீவ காலமெல்லாம் 'ஓர் அந்தரங்க சிலுவை' சுமந்து வாழ்ந்தார். அந்த அந்தரங்க சிலுவையை, ஒவ்வொரு நாளும், தன் பூமிக்குரிய ஜீவகாலம் முழுவதும், சுமார் 12,000 நாட்களுக்கும் மேலாக சுமந்து வாழ்ந்தார். இப்போது அவர் நம்மைப் பார்த்து "நீங்கள் என்னுடைய சீஷனாயிருக்க விரும்பினால் நான் செய்ததுபோலவே, நீங்களும் 'ஒவ்வொரு நாளும்' உங்கள் சிலுவையை எடுத்து வர வேண்டும்" (லூக்கா.9:23- விரிவாக்கம்) என கூறினார். இந்த பூமியில் இயேசு வாழ்ந்த 12,000 நாட்களின் ஒவ்வொரு நாட்களும் இயேசு கொண்டிருந்த வாழ்க்கையின் அடிப்படை:* **"எல்லாவற்றுக்கும் முதலாவதாக,** *என் ஜீவியம் என் பிதாவின் மீது கொண்ட அன்பை வைத்தே தீர்மானிக்கப்படுகிறது. அந்த அன்பினிமித்தம் அவருடைய கற்பனைகள் அனைத்திற்கும் கீழ்ப்படிகிறேன்!* **அதன்பின்பு,** *பிறர்மீது கொண்ட அன்பினால் ஜீவிக்கிறேன்" என்பதேயாகும்.*

*இந்த அடிப்படையிலேயே, இயேசு தன்னுடைய வீட்டில் 30 ஆண்டுகள், தன்னுடைய பூமிக்குரிய பெற்றோர்களுக்கு கீழ்ப்படிந்து*

*வாழ முடிந்தது. அந்த 30 ஆண்டு காலத்தின் 'ஒவ்வொரு நாளும்' தன் பூரணமற்ற யோசேப்பிற்கும், மரியாளுக்கும் துல்லியமாய் கீழ்ப்படிவதற்கு.... எத்தனை சோதனைகளை அவர் மேற்கொள்ள வேண்டியிருந்தது! எத்தனை 'எரிச்சலூட்டும்' சூழ்நிலையை அவர் ஜெயம் பெற வேண்டியிருந்தது! ஆனால், இது அனைத்தையும்* "**தனக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு**" *மகிழ்வுடன் செய்தார். பிதாவோடு கொண்டிருந்த சந்தோஷ ஐக்கியத்தின் மூலமாய், பிதாவின் கட்டளையாகிய "உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக" என்ற கற்பனையை நிறைவேற்றினார்.*

> ***தன் சிலுவையை எடுத்து, வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் தன் பிதாவிற்கு கீழ்ப்படியும் மனநிலையை, இந்த பூமிக்குரிய ஜீவியத்தின் கடைசி மட்டும் தொடர்ச்சியாய் காத்துக்கொண்டார்.***

*முதல் கிறிஸ்துவின் சரீரமாயிருந்த 'இயேசுதாமே' ஒவ்வொரு நாளும் 33½ வருடங்கள் சிலுவை சுமந்தார். இன்று, அவருடைய ஆவிக்குரிய சரீரமாய் விளங்கும் அவருடைய அவயவமாகிய நாமும், அவர் செய்ததைப் போலவே செய்திட வேண்டும்!*

*இயேசு கிறிஸ்துவின் ஒரு சபை,* "**சீஷர்களின் சபையாய்**" *இருக்க வேண்டுமேயல்லாமல், வெறும் மனம் மாறியவர்களாய் இருந்து விடக்கூடாது. ஒரு சீஷனாயிருக்க விரும்புகிறவன் 'தன் சுய - ஜீவியத்தை வெறுத்து' அனுதினமும் தன் சிலுவை சுமந்து வரவேண்டும் (லூக்கா.9:23). ஆகவே, இயேசுவின் ஜீவியமாகிய புதுரசத்தை விரும்பி, அதை ஒரு புதிய உடன்படிக்கை சபையாகிய 'புது துருத்தியில்' வைத்து வாழ வேண்டுமென்றால், நம்மை நாமே வெறுத்து, நம் சிலுவையை எடுத்து, ஒவ்வொரு நாளும் இயேசுவை பின்பற்றி வரவேண்டும்! அப்போது மாத்திரமே, நாம் சபையை "கிறிஸ்துவின் சரீரமாய்" கட்ட முடியும்!*

**ஒரு விசுவாசியின் அந்தரங்க ஜீவியம்**

*சபையைக் கட்டுவதற்கு, நம் ஆண்டவரோடு கொண்ட 'செங்குத்தான' உறவு மிக முக்கியமாகும். ஆண்டவரோடு கொண்ட உறவு, நம் தனிப்பட்ட ஜீவியத்தில் காணப்படும் ஓர் அந்தரங்கமாகும்! ஆனால் இன்று பிசாசு அநேக கிறிஸ்தவர்களை வஞ்சித்திருக்கும் பகுதி என்னவென்றால் "வெளிப்புற தோற்றத்தில் கொண்டிருக்கும் தேவ பக்தி" என எண்ண வைத்துவிட்டான். ஆனால், தேவனோடு கொண்ட மெய்யான அன்பின் தியானம் 100% உள்ளான, நமது அந்தரங்கமேயாகும்! ஆம், அது நம் மறைவான ஜீவியம்!*

**புதிய உடன்படிக்கையின் பிரதானமே, நம் உள்ளான மனநிலை! சிந்தனைகள்! நோக்கங்கள்! ஆகியவையாகும். மலைப்பிரசங்கத்தில், அந்தரங்க ஜீவியத்தையே இயேசு பேசினார். புதிய உடன்படிக்கையில் அன்று பழைய உடன்படிக்கையைப்போல் 'விபச்சாரத்தை தவிர்ப்பது' இப்போது காரியமல்ல! இப்போதோ, பாலியத்திற்குரிய 'பாவ சிந்தையையும்' நாம் வெறுக்க வேண்டும். பழைய உடன்படிக்கையில் நாம் எவ்வளவு கொடுத்தோம்? எவ்வளவு ஜெபித்தோம்? எவ்வளவு உபவாசித்தோம்? என்பதே காரியமாயிருந்தது. ஆனால் இயேசு வந்தவுடன், இதுபோன்ற பக்திக்குரிய செயல்களை, மற்ற ஒருவரும் அறியாதபடி 'அந்தரங்கத்தில்' கொடுத்து, ஜெபித்து, உபவாசித்திட கூறினார். இதுவே, புதிய உடன்படிக்கையின் புது துருத்தியாகும்! நாம் கிறிஸ்துவின் மீது கொண்ட அந்தரங்க தியானத்தின் 'மறைந்திருக்கும்' முக்கியத்துவத்தை அறியவில்லையென்றால், புதிய உடன்படிக்கையின் அஸ்திபார கோட்பாட்டை இன்னமும் அறியவில்லை! அவர்மீது கொண்ட அன்பின் தியானம், எப்போதும் அந்தரங்கத்தில் இருக்க வேண்டும்!**

*நம்முடைய ஜீவியம் "கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்க வேண்டும்" (கொலோ.**3:3**).* நாம் ஜீவித்திட, இதுவே ஓர் *ஆச்சரியமான வழி! நாம் கிறிஸ்துவின் மீதுகொண்ட அன்பின் தியானத்தை, பிறரிடமிருந்து எவ்வளவு மறைத்து வாழ்கிறோமோ, அவ்வளவு அதிகமாய் நாம்* **'கர்த்தருடைய இரகசியத்தை'** *கற்றுக்கொள்ள முடியும்! நம்முடைய மணவாளனோடு அந்தரங்கத்தில் ஐக்கியப்படும் நேரங்கள் வைத்திருக்க வேண்டும்! அது யாருக்கும் தெரிந்திருக்கக் கூடாது. ஒரு சிறந்த திருமண வாழ்வு என்னவென்றால், கணவன் மனைவி கொண்டிருக்கும் மகிழ்ச்சியான ஐக்கியத்தில், அங்கு வேறு யாரும் இருந்திடக்கூடாது! அவர்கள் ஒருவருக்கொருவர் உறவாடி செலவழிக்கும் நேரமும், யாரும் அறிந்திருக்கக் கூடாது! இவ்வித முழு அர்ப்பணத்தின் ஆவி கொண்ட மணவாட்டியாகிய ஜனங்களைக் கொண்டே, இன்று இயேசு தன் சபையை கட்டுகிறார்!*

*முதலாவதாக பிதாவின் மீது கொண்ட அன்பும், கிறிஸ்துவின் மீதுகொண்ட ஊக்கமான தியானமும் கொண்ட 'செங்குத்து நிலையான' உறவு நிலைநிறுத்தப்பட்ட பிறகுதான்..... நாம் ஒருவரையொருவர் நேசிக்கும் 'குறுக்கு நிலையிலான' உறவு ஸ்தாபிக்கப்பட முடியும்! இப்போது 'ஒரு முழு சிலுவை' பூரண வடிவம் பெற்று விட்டது! இனி இந்த சிலுவையில், நம்மை முழுவதும் அறையப்பட 'சந்தோஷத்துடன்' ஒப்புக்கொடுத்திட முடியும்!*

*– சந்தோஷ் பூணன்*

## 'தன்னை நியாயப்படுத்தாத' கிறிஸ்துவின் ஆவி!

'**தே**வன் - தெரிந்து கொண்டவர்கள்' (God's Elect) என்ற பாக்கியம் பெற்றவர்களின் அடையாளம்: அவர்கள் தங்களை எக்காலத்தும் நியாயப்படுத்தாமல்.... (ஆகிலும்) அவர்களை தேவனே நியாயப்படுத்துவார்! (It is God who Justifies) என ரோமர்.8:33 அறிவிக்கிறது! இந்த கிறிஸ்துவின் ஆவியே, ஒரு புறஜாதி எத்தியோப்பிய மந்திரியை உள்ளம் கவரச்செய்து "பிறருடைய அக்கிரமத்தினிமித்தம், அவர் நெருக்கப்பட்டும், தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை.... அந்த இடுக்கணில் **அவரது நியாயம் எடுபட்டு** போனது" என வாசித்து, யார் இவர்? என வியந்து போனான்! ஏசா.53:5-8 வசனங்களை பிலிப்பு விளக்கி கூறியவுடன் பரவசமடைந்த மந்திரி "கிறிஸ்துவின் இந்த ஆவியில், மூழ்கி ஞானஸ்நானம்" பெற்றான் (அப்.8:36).

**இயேசு கூறிய 'நான் முழுகும் ஸ்நானம்' என்ற தன்னை தற்காத்துக் கொள்ளாத (Never Defending) கிறிஸ்துவின் ஆவியில் மூழ்கி எழ நம் 'சுயம்' தடை செய்திட அனுமதிக்கலாகுமோ?**

நியாயப்படி **குற்றம் சாட்டப்பட்ட** 'அந்த விபச்சார ஸ்திரீகூட' தன்னை **குற்றஞ்சுமத்திய** வேதபாரக - பரிசேய கூட்டத்தில் 'வாய் பேசாதபடியால்' 'தன்னை தற்காத்துக்கொள்ளாதபடியால்' இயேசு அவளை இரட்சித்தார்! அந்த ஸ்திரீ ஏற்படுத்திய இப்படியொரு சூழலில் (atmosphere) குற்றம் சாட்டிய அனைவரும் ஓடிப்போனார்கள்! என்ற சம்பவம் நமக்கு இயேசு கற்பித்த திருஷ்டாந்தம் அல்லவோ? (யோ.8:3-11).

இயேசுவை யூதர்கள் 'பிசாசு பிடித்தவனென்று' கூறியபோது 'நான் பிசாசு பிடித்தவனல்ல' என கூறினார்! தன்னை அறைந்த சேவகனிடம் .... "என்னை ஏன் அடிக்கிறாய்?" என இயேசு கேட்டார்! (யோ.8:49, 18:23). இவ்வாறு அவர் 'நியாயம் சொன்னதை' நாமும் செய்திட கூடும் ... ஆனால் அவரோ தன்னை நியாயப்படுத்தவில்லை! அதற்கு போராடவில்லை! உள்ளதை உள்ளதென்று சொல்லவும், இல்லதை இல்லதென்றும் சொல்லவும் இயேசு நமக்கு கூறினாலும், அதற்கு மிஞ்சி 'தன்னை நியாயப்படுத்துவதை' தீமையினால் உண்டாகும்! என்றார் (மத்.5:37).

"எத்தனையோ குற்றஞ்சாட்டுகிறார்களே....." என பிலாத்து இயேசுவிடம் கேட்டபோது "**ஒரு வார்த்தையும் மாறுத்தரமாக**" தன்னை தற்காத்து (Defending) அவர் சொல்லவில்லை! அதைக் கண்டு தேசாதிபதி மிகவும் ஆச்சரியப்பட்டான்! (மத்.27:14). ஆனால், இயேசுவை பிதா தற்காத்து (Justified), ஜெயமே ஜெயமனே 3-ம் நாளில் நம் அனைவருக்கும் திருஷ்டாந்தமாய் 'தன் சுதனை' எழுப்பினார்! ஆம், தன்னை நியாயப்படுத்தாதவர்களை... நியாயப்படுத்த, தேவன் மகா உண்மையுள்ளவராயிருக்கிறார்!

– T.ரத்தினகுமார்



# யூதா அப்போஸ்தலன்,

## விக்கிரகாராதனையை எதிர்த்து மரித்த தீரன்

(AD 68)

இந்த யூதா அப்போஸ்தலன் யாக்கோபின் சகோதரன். மேலும் இயேசுவின் இளைய சகோதரனாயும் இருந்தார். விசுவாசத்தில் மிக வைராக்கியமுள்ள சீஷன். பரிசுத்தாவியின் நிறைவினால் "மகா பெரிய விசுவாசம்" கட்டப்பட வேண்டும் என வலியுறுத்தி தன் நிருபத்தில் வேதவாக்கியமாய் எழுதியுள்ளார். அந்நாட்களிலிருந்த 'சோதோம் கொமோரா பாவங்களை' சுட்டிக்காட்டி அவைகள் வேரோடு சபையிலிருந்து அகற்றப்பட வேண்டும் என கண்டித்து எழுதினார். தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தை போராடி காப்பவர்களையே 'மெய்யான பரிசுத்தவான்கள்' எனவும் அறைகூவல் விடுத்தார்.

தன் அப்போஸ்தல பணியை கடும் பிரயாசம் எடுத்துப் பல நாடுகளுக்கு, பயணித்து நிறைவேற்றினார். மொசபத்தோமியா, சீரியா, அரேபியா, இன்றுள்ள ஈரான் தேசங்களுக்கு மாத்திரமல்லாமல் வெகு தொலைவிலிருந்த எடிமா தீவுகளுக்கும் சென்று சுவிசேஷத்தை, விசுவாச வல்லமையோடு பிரகடனம் செய்தார். சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு நிறைந்த முகமதிய நாடுகளில் சிறிதும் அச்சமின்றி அவர் செய்த ஊழியங்கள், அவருடைய மாபெரும் விசுவாச வீரத்தை வெளிப்படுத்துவதாயிருக்கிறது.

தெய்வ விசுவாசத்திற்குப் புறம்பான விக்கிரக ஆராதனையை அவர் கடுமையாக எதிர்த்துப் பிரசங்கித்தார். அவருடைய பிரசங்கங்கள் ஏராளமான மக்களுடைய இருதயத்தை மனந்திரும்பச் செய்தது. அஞ்ஞான தெய்வ ஆராதனை கொண்டவர்கள், தங்கள் விக்கிரக ஆராதனையை விட்டு திரும்பினார்கள். அன்று அவர்கள் செய்த ஏராளமான தெய்வ பலிகளை நிறுத்தினார்கள். அதனிமித்தம் ஏற்பட்ட பெருநஷ்டத்தை, அக்காலத்திலிருந்த பூசாரிகளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஏராளமான கோவில் பக்தர்கள் நின்று விட்டதும் அல்லாமல், தங்களுக்கு பண நஷ்டமும் ஏற்பட்டப்படியால், யூதா அப்போஸ்தலனுக்கு விரோதமாக கொதித்தெழுந்தார்கள். அவர்கள் வைத்திருந்த திட்டத்தின்படி, யூதாவை சுற்றி வளைத்த இந்த பூசாரிகள், கொடூரமான தடிகளாலும், கட்டைகளாலும் மாறி மாறி அடித்து, இரத்த வெள்ளத்தில் யூதாவை கொலை செய்தார்கள்.

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## குறுகிய ஜீவியத்தில் 'காலத்தை வீணாக்குவது' நித்திய இழப்பு!

நமது வாழ்நாட்காலம், விரைவாக ஓடி, மெழுகுவர்த்தியைப்போலக் கரைந்து மறைந்து கொண்டிருக்கின்றது. நம்மில் அநேகர் காலத்தின் அருமையை அறிந்து வாழ்வதில்லை. கர்த்தர் நமக்குக் கிருபையாகக் கொடுத்த சிறிய ஆயுட்காலத்தை அவரது ஜீவனுள்ள நாம மகிமைக்கென்று மாத்திரமே நாம் செலவிடக் கடனாளிகளாயிருக்கின்றோம். இவ்வுலகத்தில் 'எவ்வித நோக்கமுமின்றி' வீணே தங்கள் நேரத்தைப் பாழ்கடித்து வாழும் உலக மக்களைப்போல நாம் வாழாமல், நமது பொன்னான நேரத்தைக் குறித்து கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும்.

நம்மைச் சுற்றி வாழும் உலக மக்கள் தங்கள் நேரத்தையும், காலத்தையும்.... ஒரு காசுக்கும் பயனற்ற விதத்தில் அரட்டையடித்து, வம்புவார்த்தைகள் பேசி, மொபைல் 'கேம்ஸ்' என சீரழிந்து நாசம் பண்ணுவதைக் காண்கையில் நம்மில் பலருக்கு எத்தனை வேதனையின் அனுபவமாயிருக்கின்றது!

உலகின் எங்கோ ஓரிடத்திலுள்ள சூரியக்கடிகாரம் ஒன்றில் "நீ என்னை வீண்விரயம் பண்ணலாமேயன்றி, என்னை ஒருக்காலும் நீ தடுத்து நிறுத்தவியலாது" என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்ததாம். எத்தனை உண்மையான வார்த்தைகள்! ஜாண் வெஸ்லி, *F.B* மேயர் போன்ற பரிசுத்தவான்கள் தங்கள் வாழ்நாள் காலத்தில் ஒவ்வொரு நாளின் 24 மணி நேரத்தை "நிமிஷ நேரமாக பிரித்து வைத்து" அதை மிகுந்த விவேகத்தோடும், கருமித்தனமான விதத்திலும்..... தேவ நாம மகிமைக்காவும், ஆத்தும ஆதாயப் பணிக்காகவும் நேரத்தை செலவு பண்ணியிருக்கின்றார்கள். ஆனபடியால்தான், பெஞ்சமின் ஃபிராங்ளின் என்ற மேதை "நீ ஜீவனை விரும்புவாயானால் உன் காலத்தை வீணடிக்காதே, ஏனெனில் உனது வாழ்வின் மொத்தக் கருப்பொருளே காலத்தில்தான் அடங்கிக்கிடக்கின்றது" என்று கூறி வைத்தார்!

இந்த குறுகிய ஜீவியம் தங்கள் 'நித்திய ஜீவனுக்குள்' அல்லது நித்திய காலத்திற்குள் நடத்துகிறது என அறிந்து விழிப்படைந்தவர்களே, தங்கள் காலத்தை கர்த்தருடைய கரத்தில் தந்து, தெய்வ பயத்தோடு ஜீவிப்பார்கள்!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.